Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Assistant Session Judge, Vaniyambadi, Vellore District

Deposition of witness for

| | |
|---|---|
| Name | R.Hemavathy |
| Father's Name | L.Rangaperumal |
| Village | Nattarampalli |
| Taluk | Nattarampalli |
| Caste | MBC |
| Calling | Inspector of Police |
| Religion | Hindu |
| Age | 43 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30.03.2023

SC.98/2022 PW1 Name:. ேஹமாவதி

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பத்துர் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வளாராக பணியாற்றி வருகிறேன். 19.05.2017 வருடம் நான் வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் உதவி ஆய்வளாராக பணியில் இருந்தபோது காவல் ஆய்வளார் மற்றும் சிறப்பு உதவி ஆய்வளார் விஜயன் மற்றும் தலைமை காவலர்கள் சேதுகரசன், ஈஸ்வரன் ஆகியோர் சகிதம் ஆய்வாளருடன் மது விலக்கு சம்மந்தமாக கண்காணித்து போகும்போது வேப்பமரத்து சாலை கிராமத்தில் மகேஸ்வரிக்கு சொந்தமான நிலத்தில் ஒரு நபர் வெள்ளை நிற கேனை வைத்து கொண்டு இருந்தவர் போலிசார் ஆகிய எங்களை கண்டதும் ஒட முயற்சித்தவரை பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து விசாரிக்க அவர் பெயர் சிரஞ்சிவி வயது 24 த/பெ. மனோரகன் 3/377, மாரியம்மன் கோயில் தெரு, நேதாஜி நகர் வாணியம்பாடி, என்று தெரிவித்தார். அவர் இருந்த இடத்தை சோதனை செய்து பார்த்த போது 35

கொள்ளளவு கொண்ட 5 கேன்களில் மொத்தம் 175 லி. ஏரிசாராயம் இருந்தது ஆய்வளார் அவர்கள் மேற்படி எதிரியை விசாரித்து அவரை கைது செய்து அவரிடமிருந்த எரிசாரயத்தை சாட்சிகள் கோவிந்தராஜ் முனிசாமி ஆகியோர் முன்னிலையில் மகஜிரில் கைபற்றினார். மேலும் எதிரியை விசாரிக்க அவர் தன் சித்தி மகேஸ்வரி என்பவர் எரிசாராயத்தில் அதிக போதைக்காக அடையாளம் தெரியாத நபரிடம் மருந்து வாங்கிகொடுத்ததாகவும் அதை எரிசாராயத்தில் கலந்தாகவும் ஒப்புதல் வாக்குமூலம் அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தார். அந்த எரிசாராயத்தை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்ற உதவியாக இருந்தோம். பகல் 15.30 மணிக்கு எதிரியுடன் காவல் நிலையம் சேர்ந்து திரேக சோதனை செய்து நிலையம் பார வசம் ஒப்படைத்தார். இது சம்மந்தமாக நிலையம் குற்ற எண்.194/2017 4(1)(aaa), 4(1–A), & 6, 7 TNRS Rules Act 2000 படி வழக்கு பதிவு செய்யபட்டது. இது சம்மந்தமாக காவல் ஆய்வளார் எங்களை விசாரித்தார்.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 30/03/2023 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

Sd/செல்வி.எஸ்.அசீன்பானு, பி.எல்.,
சார்பு நீதிபதி
வாணியம்பாடி.